

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.9.2024) உடல் நலக்குறைவால் மறைவெய்திய – இனமானப் பேராசிரியர் அவர்களின் சகோதரி திருமதி இராஜம் இராமதாஸ் அவர்களின் சென்னை, இராயப்பேட்டையிலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பேராசிரியர் அவர்களின் மகன் அன்புச்செல்வன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் மதன்மோகன் ஆகியோர் உள்ளனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம் - மயிலத்தில் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

# பெரியார் - அண்ணா - கலைஞரின் ஒட்டுமொத்த உருவம் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

மயிலம், செப். 21 –

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி மயிலம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் கூட்டேரிப் பட்டில் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர் சுப்பிரமணி தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர்கள் செல்வகுமார், பாலசுந்தரம், இந்திரா சுரேஷ், ஒன்றியப் பொருளாளர் ஆறுமுகம், மாவட்டப் பிரதிநிதிகள் கோபாலகிருஷ்ணன், சசிகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மயிலம் தெற்கு ஒன்றியச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சேதுநாதன் ஏற்பட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை



அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி கழக நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார் .

இக்கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்,

ஆட்சிப் பொறுப்பேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் மூன்று ஆண்டுகளில் எண்ணற்ற பல திட்டங்களை செய்துள்ளார்.

இன்றைக்கு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லை. இவர்களின் ஒட்டுமொத்த உருவமாக முதல்வர் தளபதியும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும்தான் உள்ளனர்.

இவர்களின் கரத்தை வலுப்படுத்த எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் பெற்று எதிர்த்து நிற்பவர்கள் டெபாசிட் இழக்க செய்ய வேண்டும் அதற்காக முதலமைச்சரின் ஆட்சியின் திட்டங்களையும், சாதனைகளையும், மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும் என தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் திராவிட முன்னேற்ற கழகம் இன்னும் 100 ஆண்டு காலம் ஆட்சியில் இருக்கும் என உறுதிபட தெரிவித்தார் .

கூட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கௌரவிப்பது, கழகத்தில் மகளிர்களையும், இளைஞர்களையும் உறுப்பினராக சேர்த்தல், முதலமைச்சர் செய்த சாதனைகளை துண்டுப் பிரசுரங்கள் மூலம் இல்லம்தோறும் கொண்டு செல்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இச்செயல்வீரர்கள் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர்கள் அருணகிரி, அமுதா ரவிக்குமார், மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணி மாறன், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி, மாவட்டக் கவுன்சிலர்கள் விஜயன், மகேஸ்வரி குமரேசன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் அன்சாரி, மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் செந்தில் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (19.9.2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு அரசின் முத்திரை திட்டங்கள் ( ICONIC PROJECTS ) தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், துறை சார்ந்த செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி ஸ்டெர்லைட் வன்முறை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட

# வருவாய்த் துறை அலுவலருக்கு பதவி உயர்வு அளிக்கப்படவில்லை!

## தவறான செய்தியை மறுத்து – தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் அறிக்கை!

தூத்துக்குடி, செப்.21-

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத்தின் அறிக்கை வருமாறு:-


தூத்துக்குடி மாவட்டத்தில் பணியாற்றும் 20 துணை வட்டாட்சியர்களுக்கு கடந்த 06.09.2024 அன்று வட்டாட்சியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இதில் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்காக உத்தரவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள வருவாய்த்துறை அலுவலர்களில் ஒருவருக்கு வட்டாட்சியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை வன்முறைச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய அமைக்கப்பட்ட நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்தின் அறிக்கையில் துப்பாக்கிச் சூடு சம்பவத்துடன் தொடர்புடைய வருவாய்த்துறை அலுவலராக குற்றம் சாட்டப்பட்டுள்ள மு.கண்ணன் என்பவருக்கு பதவி உயர்வு அளிக்கப்படவில்லை.

மாறாக திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் துணை வட்டாட்சியராகப் பணிபுரிந்த து.கண்ணன் என்பவருக்கு வட்டாட்சியராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு அளிக்கப்பட்ட து.கண்ணன் என்பவருக்கும் துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. பெயர்க்குழப்பம் காரணமாக செய்தி ஊடகங்கள் தவறான தகவலை வெளியிட்டுள்ளதாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

# தமிழ் நாம்! தமிழர் நாம்!







தமிழ்நாம்! தமிழர்நாம்!
தலைநி மிர்ந்த இனம்நாம்!
அறிவுநாம்! ஆற்றல்நாம்!
திறப்புநாம்! புதுமை நாம்!
நெறியில் புகழை
நிறுத்திவைத்த மரபுநாம்
பிறப்பின் இறப்பின்
பெருமை நாம்! நாம்!
மெய்யிது ஆம்! ஆம்! ஆம்!

தந்தன தந்தன
தந்தனப் பாட்டுப் பாடி
வெந்ததைத் தின்பது
விதிவந்து சாவது
கந்தை வாழ்வெனும்
கதையினை மாற்று!
சிந்தையில் சூரியத்
தீப்பந்தம் ஏற்று! நீ
புதுமையின் ஒளியூற்று!

குறள்நாம்! சிலம்புநாம்!
குறையிலா மணிமே கலை
நாம்!
சிந்தை புதிது
தெரிந்து செய்த
தந்தை பெரியார்
தடமும்நாம்! அண்ணா
தந்த நடையும்நாம்!
கலைஞர் தயாரித்த
படையும் நாம்! நாம்! நாம்!

கவிப்பேரருவி
**ஈரோடு தமிழன்பன்**



### இனமானப் பேராசிரியரின் அன்புச் சகோதரி

# திருமதி இராஜம் இராமதாஸ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 21 –

இனமானப் பேராசிரியர் அவர்களின் அன்புச் சகோதரி இராஜம் இராமதாஸ் மறைவுக்கு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**நம் நெஞ்சங்களில் நிறைந்து வாழும் இனமானப் பேராசிரியர் அவர்களின் அன்புச் சகோதரி திருமதி. இராஜம் இராமதாஸ் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.**

**அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் அவரது மகன் மருத்துவர் குணாளன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### பிச்சையெடுக்கும் சிறுவர், சிறுமியரை

# பள்ளியில் சேர்த்த மனித சேவை!

## தமிழ்நாடு அரசின் கொத்தடிமை கண்காணிப்புக் குழு உறுப்பினருக்குப் பாராட்டு!

*சென்னை, செப். 21 -*

*வாடிப்போன முகம், கிழிந்த உடைகள், சீவப்படாத தலைமுடி, பல நாட்களாக சரியாக சாப்பிடவில்லை என்பதை குறிக்கும் முகம். யாராவது தன்னை பேச அழைப்பார்கள் என்று சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டான் 8 வயது சிறுவன், அமித்.*

*பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய அமித், வறுமையிலிருந்து தப்பிக்க வேறு வழி தெரியாததால், ரயில் நிலையங்களிலும், ரயில்களிலும் பாட்டுப்பாடி பிச்சையெடுப்பதையே தொழிலாக கொண்டுள்ளான்.*

*சமீபத்தில், சென்னை புறநகர் ரயிலில் இந்த சிறுவன் பாட்டுப்பாடி, பிச்சை எடுப்பதை கண்டு அதிர்ச்சியடைந்த தமிழக அரசின் கொத்தடிமை கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஜஸ்டின் ஆண்டனி.*

*இந்த சிறுவனின் பெற்றோர் மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் வாழ்வதும், அதுவே இந்த சிறுவனையும் பெற்றோரையும் பிச்சை எடுக்க தூண்டியது எனவும் தனது 40 நிமிட ரயில் பயணத்தின் போது புரிய வந்ததாக கூறுகிறார் ஜஸ்டின் ஆண்டனி.*

*ஆரம்பத்தில், இந்த சிறுவன் பேசத் தயங்கி, விலகிச் செல்ல முயன்றுள்ளான். ஆனால் ஜஸ்டின் ஆண்டணியின் கனிவான பேச்சால் தனது துயரங்களை பகிர்ந்துள்ளான் சிறுவன் அமித். சென்னையில் உள்ள திரிசூலத்தில் தனது பள்ளியைத் தொடர விரும்பியுள்ளான் இச்சிறுவன்.*

*ஆனால், இந்த இளம் வயதிலேயே இச்சிறுவனை பிச்சை எடுக்க தூண்டி, பணத்தின் சுவையைக் காட்டியுள்ளனர் சிறுவனின் பெற்றோர்.*

*இந்த குறுகிய ரயில் பயணத்தினூடே, கல்வியின் மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி சிறுவனுக்கு விளக்கியுள்ளார் ஜஸ்டின் ஆன்டணி.*

*இதனால், சிறுவன் தனது மூன்றாம் வகுப்பைத் தொடர்வதாக உறுதியளித்துள்ளான். சம்பவத்தை நேரில் பார்த்த பயணிகள், சரியான நேரத்தில் செயல்பட்ட ஜஸ்டின் ஆண்டனியை மிகவும் பாராட்டியுள்ளனர்.*



பொன்னேரியில் மறைந்த முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் உடலுக்கு தலைமைக் கழகம் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழகக் கொடி போர்த்தி அஞ்சலி செலுத்தினார். மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. மற்றும் அண்ணா அறிவாலயம் மேலாளர் ஆர்.பத்மநாபன் உள்ளிட்டோர் உடனுள்ளார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேடப்பட்டி இரா. முத்தையா
### செப்டம்பர் 21 (2022)



**திராவிடக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்ட இவர், தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து தீவிர கழகப் பணியாற்றினார்.**

**மதுரையில் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நான்குமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அத்துடன் – தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும், ஒன்றிய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**